REGISTERED No. M. 1318.

ஓம்.

நாமகள் நற்றுணை.

தமிழ் மகவு.

புதுவைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் வெளிவரும்

தமிழ்ப் பத்திரிகை.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.

ஆண்டு — க.	காளயுக்தி ௵ வைகாசி ௴ 1918-ம் ஆ௳ மே ௴	மதி — அ.

உள்ளுறை:

	பக்கம்.
க. மலையமான் அல்லது திருமுடிக்காரி.	அரு.
உ. பத்துப்பாட்டு.	சுo.
௩. எப்படியிருந்தால் இல்லறம் இனிது நடக்கும்?...	சுஉ.
ச. கம்பர் சரித்திரம்.	சு௩.
ரு. நாம் எதனை விரும்புவது?	சுரு.

பத்திராசிரியர் :— வீ. துரைசாமி முதலியார்,
கவர்ன்மெண்ட் கல்விச்சாலைத் தமிழ்ப் பண்டிதர்.
புதுவை.

வருடச் சந்தா விவரம்:

உள்ளூர்க்கு ...	ரூ ?	வெளிநாட்டுக்கு ...	ரூ க
வெளியூர்க்கு ...	ரூ ௩	தனிப் பிரதி ...	அணா க

உ

தோன்றாத்துணையே துணை.

உற்சவ வைபவம்.

நிகழும் காளயுக்தி ௵ வைகாசி ௴ ௩௨ முதல் திருப்பாதிரிப்புலியூரில் ஸ்ரீ பாடலேசுரரது பிரம்மோற்சவத்தை மேற்படி ஆலய தர்மகர்த்தர் ஸ்ரீமான் தீ-சொ-முருகப்பசெட்டியாரவர்கள் முன்னிருந்து அதிவிமரிசையாய்ச் சிறப்புற நடத்தினது யாவருங் கொண்டாடத்தக்கது. பல வருஷங்களாக ஆலயத் திருப்பணி நிமித்தம் தடையுற்றிருந்த இத்திருவிழாவை இவ்வருஷம் ஆரம்பித்து நடாத்தியது சனங்கள் யாவர்க்கும் அளவிறந்த மகிழ்வை யளித்ததென்பதற்கு ஐயமில்லை.

இவ்விழாவின் அங்கமாக மேற்படியூர்ச் சந்நிதிவீதி ஸ்ரீமத் ஞானியார் மடாலயத்தில், வாணீவிலாச சபையின் அறிகுறியாக ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் பல அறிவின் மிக்காரைக்கொண்டு மேற்படி பிரம்மோற்சவத்தின் ஆறாந் திருவிழாமுதல் இறுதிவரையில் அரிய பல விஷயங்களை யாவரும் இன்புறும்படி உபந்நியாசிக்கச் செய்வித்தது மன்றித் தாமும் பல அரிய பெரிய விஷயங்களைப் போதித்துப் பிரசங்காமிர்த தாரைகள் பெய்யுங் கருணை முகிலாய்த்தோன்றி விளங்கிய காட்சி யாவர்க்கும் மிக்க உற்சாகத்தை உண்டாக்கியது.

நமது நாட்டிலுள்ள ஆலயங்கடோறும் நடைபெறும் உற்சவ காலங்களில், வேறுவகையான விநோதங்கள் நடைபெறச் செய்வதினும், இவ்வகையான உபந்நியாசங்கள் பல அறிஞர்களைக் கொண்டு நடத்தப்படுமாயின் நமது மதாசாரங்கள் குன்றாது நிலை பெறக்கூடுமன்றோ? ஆலயத் தருமகர்த்தர்கள் இது கவனிக்க.

கண்டுகேளித்தோன்.

ஓம்.

நாமகள் நற்றுணை.

தமிழ் மகவு.

புதுவைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் வெளிவரும்

தமிழ்ப் பத்திரிகை.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினுங் கற்கை நன்றே.

ஆண்டு — க.	காளயுத்தி ௵ வைகாசி ௴ 1918-ம் ௵ மே ௴	மதி — அ.

மலையமான் அல்லது திருமுடிக்காரி.

காரியென்னும் பெயர்புனைந்த இவன் குறுநில மன்னனும், கடையெழு வள்ளல்களில் ஒருவனு மாவன். இவனது ஊர், தொண்டை நாட்டுக்கும், சேதி நாட்டுக்கும் இடையேயுள்ள மலை நாட்டுத் “திருக்கோவலூ”ரென்ப. இது பெண்ணையாற்றங் கரையிலுள்ளது; “சேதிநன்னாட்டு நீடு திருக்கோவலூர்” எனச் சேக்கிழார் கூறுமாற்றானும், “துஞ்சாமுழவிற் கோவற் கோமான், நெடுந்தேர்க் காரி கொடுங்கா முன்றுறைப், பெண்ணையம் பேர்யாற்று நுண்ணறல் கடுக்கும்,” (அகம்) “பெண்ணையம்படப்பை நாடுகிழவோயே” (புறம் 126) என்பன வற்றானும் அறியலாம். “பழையனூர்க் — காரியன்றீந்த களக்கோலும்” என்பதனால் இவன் பழையனூரிலும் இருந்தானெனத் தெரிகிறது. இவனுக் குரிய மலை “முள்ளூர்” என்னும் பெயர்த்து. இது “முள்ளூர் மன்னன் கழறொடிக்காரி” (குறு) “முரண்கொ டேப்பிற் செவ்வேன் மலையன்—முள்ளூர்க்கானம்”—(குறு 312) “ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்” (நற் 170) “பயன் கெழுமுள்ளூர்” (புறம் 123)

"பறையிசை யருவி முள்ளூர்ப் பொருந" (புறம் 126) என்பவற்று லறிக. இவனை மலையன், மலையமான், மலையமான்திருமுடிக்காரி எனப் பெயரிட்டு வழங்குவர். இப்பெயர் இவன் சோழனுக்குத் துணை நின்றுதவிய காரணத்தால் இவனுக்குப் பட்டமாகச் சோழனால் கொடுக்கப் பெற்ற தென்ப. அல்லது கொல்லிமலையை எல்லையாகவுடைய திருமுனைப்பாடி நாட்டை இவன் சேரவேந்தன்பால் பெற்றதாலும், அதன்கண் சோன் மலைநாட்டுப் பகுதியும் அடங்கியது பற்றி மலையன் மலையமான் என அழைக்கப்பட்டானென்று கொள்ளுதலும் பொருந்தும். "ஓடா மலையன்" "செவ்வேன் மலையன்" (அகம்) "தொலையா நல்லிசை விளங்கு மலையன்" "பீடுகெழு மலையற்பாடியோரே" (புறம் 124) என்பனவற்றால் மலையமான் என்னும் பெயர்கள் பிரயோகிக்கப் பட்டிருப்பதைக் காணலாம். இவன் புலவர்க்குத் தேர்கொடுத்தலால் "தேர்வண் மலையன்" எனவும் படுவான். (நற் 100) இவ்வள்ளல் ஈகை மிக்குடையனாய் இரவலர்க்கு வரையாது பொன்னும், மணியும், குதிரையும், நாடும் உதவிப் பெரும் புகழ்வாய்ந்து இன்சொல்லும் இனிய குணமும் படைத்துச் சிறந்தனன். இது:—

"கறங்குமணி
வாலுளைப் புரவியொடு வையக மருள
வீர நன்மொழி யிரவலர்க் கீந்த
வழறிகழ்ந் திமைக்கு மஞ்சுவரு நெடுவேற்
கழறொடித் தடக்கைக் காரியும்"

எனவரும் சிறுபாணாற்றுப்படை (91-95) அடிகளாலும்,

"தொலையா நல்லிசை விளங்கு மலையன்
மகிழா தீத்த விழையணி நெடுந்தேர்
பயன்கெழு முள்ளூர் மீமிசைப்
பட்டமாரி யுறையினும் பலவே" (புறம் 123)

என்னுஞ் செய்யுளாலும் அறியப்படும். இவன் கொடை மடத்தால் சிறந்து புகழ்பெற்றது போலவே போர்புரிந்து பகைவரைப் புறங்காணச் செய்யும் ஆற்றல் மிகும் வீரனாகவும் விற்போரினும்

மிக்கானாய் மாற்றலர் பசு நிரைகவரும் திறத்தினனாகவும் விளங்கினன். இங்ஙனம் வெற்றிபெறும் வீரனாய் விளங்கிய காரணத்தால் சேர சோழ பாண்டிய ரெனும் மூவேந்தர்க்கும் ஒரு சமயத்தில் உதவிபுரியும் உபகாரியாக இருந்தா னென்றுங் கூறுப. இது:—

—"முள்ளெயிற்
றரவெறி யுருமின் முரசெழுந் தியம்ப
வண்ணல் யானையொடு வேந்துகளத் தொழிய
வருஞ்சமந் ததையத் தாக்கி நன்று
நண்ணாத் தெவ்வர்த் தாங்கும்
பெண்ணையம் படப்பை நாடுகிழ வோயே"

என்பதனால் இவன் வீரத்தன்மையும்,

—"பாண
மாயிரு முள்ளூர் மன்னன் மாவூர்ந்
தெல்லித் தரீஇய வினநிரைப்
பல்லான் கிழவரி னழிந்த (நற் 291)

—"முனையூர்ப்
பல்லா நெடுநிரை வில்லி னொய்யுந்
தேர்வண் மலையன்" (நற் 100)

என்பதனால் வில்லாண்மையில் பசுநிரை கவருந்திறமும்,

"வீயாத் திருவின் விறல்கெழு தானை
மூவரு ளொருவன் றுப்பா கியரென
வேத்தினர்"—— (புறம் 122)

என்பதனால் மூவேந்தர்க்குத் துணைவனாக நின்றமையும் உணரப்படும். இங்ஙனம் புகழ் சிறந்து விளங்கும் நாளில், ஆரியர் பெரும்படையுடன் வடக்கிருந்து தமிழ்நாடு புகுந்து திருக்கோவலூரை முற்றுகையிட்டனர். அதுகண்ட காரிமன்னன் அஞ்சாது மிகுந்த வீரத்துடன் எதிர்த்துப் போர்செய்ய ஆரியர்கள் ஆற்றாராய்ப் பின்னடைந்து ஓட்டெடுத்தனர். இது:—

"ஆரியர் துவன்றிய பேரிசை முள்ளூர்ப்
பலருடன் கழித்த வெள்வாள் மலையன
தொருவேற் கோடி யாங்கு" (நற் 170)

என்பவற்றால் தெளிவாம்.

இவ்வாறு இவ்வள்ளல் வெற்றிப்பாடு மேன்மேலும் சிறப் பதைக்கண்டு பொறுத "தகடூர் அதிகமானெடு மானஞ்சி" தனது படையோ டெய்தித்திருக் கோவலூரை முற்றுகைசெய்து மலைய மானைத் தோற்கடித்து அவனையுந் துரத்தி நாட்டினையுங் கைப் பற்றிக்கொண்டான். தோற்றேடிய காரி மிகவருந்திச் "சேரன் பெருஞ்சேரல் இரும்பொறையை" யடைந்து அவன் விரும்பிய வாறு கொல்லிமலையை ஆண்ட "வல்விலோரியுடன்" போர் புரிந்து அவனைக்கொன்று அவ்வோரியினது கொல்லிமலையைச் சேர னுக் கீந்தனன். இது :—

—"பழவிற
லோரிக் கொன்ற வொருபெருந் தெருவிற்
காரி புக்க நேரார் புலம்போற்
கல்லென் றன்றூ லூரே (நற் 320)

என்பதால் ஓரியைக்கொன்று அவன் நாட்டைக் கவர்ந்ததும்,—

"முள்ளூர் மன்னன் கழறெடிக் காரி
செல்லா நல்லிசை நிறுத்த வல்வி
லோரிக் கொன்று சேரலற்கீத்த
செவ்வேர்ப் பலவின் பயங்கெழு கொல்லி" (அகம் 209)

என்பதில் கொல்லிமலையைச் சேரனுக்குக் கொடுத்ததும் தெளி வாம். பின்னர்க்காரி மன்னன் தனது பகைவனை அதிகமான் மீது சேரனைப் படையெடுக்குமாறு செய்ய அவனும் தகடூரின் மீது படை செலுத்திப் போரிட்டு அஞ்சியைக் கொன்று வீழ்த்தி அவன் முன்னம் கைப்பற்றி யிருந்த திருக்கோவலூரைக் காரிக் குத்தர, அவனதை மகிழ்வுடன் பெற்றுப் பழமைபோல் அரசாண் டிருந்தனன் என்ப.

இங்ஙனம் அரசு புரிந்து கொண்டிருந்த சமயம் இவ்வள்ளல் பால் பரிசு பெறும் பொருட்டு ஔவையார் போயினர். அப்போது அவ்வள்ளல் தங்குலத்திற்குரிய தொழில் நிமித்தம் கொல்லைப் புறத்துள்ள நிலத்திற் களையெடுத்தலைக் கவனித்தற் பொருட்டுச்

சென்றிருந்தனன். ஔவையாரும் அவனைக்காண அங்குப்போயினர். இவரது உள்ளக்குறிப்பைக் கூறுமலே யுணர்ந்த வள்ளல் தமிழ் மூதாட்டியைப் பிரிதலில் சிறிதும் மனமில்லாதவராகி இவரை இன்னும் சிலகாலம், தம்பால் வைத்துச் சிறப்பிக்க மனங்கொண்டு இப்போது இவர் செல்லாமைக்கு இதுவே தக்க சூழ்ச்சியாகுமென்று கருதிக் களையெடுக்கும் கருவியாகிய களைக்கோட்டை இவர்பால்தந்து வேறு தொழில் மேலிட்டுச் சென்றனர். ஔவையாரும் அங்ஙனமே களையெடுத்து அன்று விடைபெறக் கூடாமையால் அவன் தப்பால் வைத்திருக்கும் பேரன்பை எளிதிலுணர்ந்து அவன் விரும்பியவாறு அவனிடத்துச் சில காலந்தங்கி யிருந்து பின் அக்காரிக்கு ஆடுவாங்கிக் கொடுக்க வேண்டி "வாதவன்," "வத்தவன்," "யாதவன்" என்னும் மூவரிடத்தும் போய்க்கேட்க, அவர் கொடாமையால் சேர நாட்டுக்குச் சென்று *வஞ்சி நகர்புகுந்து அங்குள்ள சேரன்பால்,—

"வாதவர் கோன் பின்னையென்றான் வத்தவர்கோ னாளையென்றான்
யாதவர் கோன் யாதொன்று மில்லையென்றான் — ஆதலால்
வாதவர் கோன் பின்னையினும் வத்தவர்கோ னாளையினும்
யாதவர் கோ னில்லை யினிது" (23 தமிழ் நாவலர் சரிதை)

என்னும் பாடலைப்பாடித் தஞ்செய்திகூற அச்சேரன் மகிழ்ந்து பொன்னுடு கொடுக்கப்பெற்று அப்போது:—

"சிரப்பார் மணிமுடிச் சேரமான் றன்னைச்
சுரப்பாடு கேட்கவே பொன்னாடொன் றீந்தான்
இரப்பவ ரென்பெறினுங் கொள்வர் கொடுப்பவர்
தாமறிவர் தங்கொடையின் சீர்" (தமிழ்நாவலர்சரிதை)

என்னும் பாடலைக்கூறிக்காரி பொருட்டுப் பெற்ற பொன்னாட்டை அவனிடஞ்சேர்த்துச் சின்னாட்டங்கி விடைபெற்றனர். மற்றோர் கால் ஔவையார்:—

---

* இது மலைநாட்டில் பேர்யாறு கடலிற் சங்கமமாகுமிடத்திற்குப் பக்கத்தேயுள்ள கொடுங்கோளூரென்பர். திருவஞ்சைக் களத்தையும் வஞ்சிநகரெனக் கூறுவர். இவ்விரண்டூர்களும் கொச்சியைச் சேர்ந்த நாட்டில் ஒன்றற்கொன்று சமீபமாகவுள்ளன.

"பாரி பறித்த பறியும் பழையனூர்க்
* காரியன் றீந்த களைக்கோலுஞ் - சேரமான்
வாராயோ வென்றழைத்த வார்த்தையு மிம்மூன்றும்
நீலச்சிற் றாடைக்கு நேர்"

எனப்பாடிச் சிறப்பித்துக் காரிபால் உள்ள அன்பை விளக்கினர்.

இங்ஙனம் பேரும், புகழும், பெருமையும் பெற்று இரவலர்க்கினியனாய் விளங்கிப் பொய்யுடல் நீத்துப் புகழுடம்பெய்திய வள்ளல்காரியின் வரலாற்றை இத்துடன் நிறுத்திக் கொண்டனம்.

சி. கு. நாராயணசாமி முதலியார்,
கோயமுத்தூர்.

பத்துப்பாட்டு.

(எஅ - ம் பக்கத் தொடர்ச்சி.)

எ-வது. நெடுநல்வாடை:—இது கஅஅ-அடிகளுடையது; பகைமேற்சென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பிரிந்து வருந்துந் தலைவிக்கு அவ்வருத்த நீங்கும்படி அவன் பகையைவென்று விரைவில் வருவானாகவென்று கொற்றவையை (துர்க்காதேவியை)ப் பரவுவாள் ஒருத்தி கூறியதாகப் பாடப்பட்டது. கூதிர்க் (குளிர்) காலமாகிய ஐப்பசி கார்த்திகை மாதங்களின் இயல்பையும், தலைவி தனித்திருக்கை யாலாய வருத்த மிகுதியையும், பாசறையில் தலைவன் இருக்குந் தன்மையையும் இதில் விளங்கக் காணலாம்.

"வையகம்பனிப்ப வலனேர்புவளை இப்
பொய்யாவானம் புதுப்பெயல்பொழிந்தென
... ...
பலரொடுமுரணிய பாசறைத்தொழிலே"

என்பன இந்நூலின் முதலும் ஈறுமாம்.

---

* வரினியற்றுங் களைக்கோட்டை யீந்தன்ன மிட்டுநல்ல
பாரிபறித்தென்னும் பாடல் கொண்டோன் பண்பு சேர்ப்பழைய
னூரி லிருப்பவ னௌவைதன் பாடற் குவந்தபிரான்
மாரியெனத் தருகைக்காரியுந் தொண்டை மண்டலமே.
(தொண்டைமண்டல சதகம்)

வாடைக்காற்றிற் றோன்றின கூதிர்க்காலத்துப் பாசறையைப் பிறந்த வழிக்கூறலென்னும் ஆகுபெயரால் வாடையென்று கூறினர்.

இக்குளிர்காலம் வீட்டிற்செறிந்து போகம் நுகர்வார்க்குச் சிறந்த தாயினும், அரசன் போகம்வேண்டிப் பொதுச்சொற் பொருளாய் அப்போகத்தின் மனமற்று வேற்றுப்புலத்துப் போந்திருக்கின்ற இருப்பாகலின், அரசற்கு நல்லதாகிய வாடையாயிற்று என்க.

"பொய்யாவானம் புதுப்பெயல்பொழிந்தென
... ...
மெய்க்கொள்பெருந்பனி நலியப்பலருடன்
கைக்கொள்கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க
மாமேயன்மறப்ப மந்திகூரப்
பறவைபடிவன வீழக்கறவை
கன்றுகோளொழியக் கடியவீசிக்
குன்றுகுளிர்ப்பன்ன கூதிர்"

"தொகுவாய்க்கன்னற் றண்ணீருண்ணார்
பகுவாய்த்தடவிற் செந்நெருப்பார
... ...
காதலர்ப்பிரிந்தோர் புலம்பப்பெயல்கனைந்து
கூதிர்நின் றன்றால்"

இவையும் பிறவும் குளிர்காலத்தியல்பு கூறியவந்தன.

"விண்ணூர்புதிரிதரும் வீங்குசெலன்மண்டிலத்து
முரண்மிகுசிறப்பிற் செல்வனொடுநிலைஇய
வுரோகிணிநினைவன ணோக்கிநெடிதுயிரா
மாயிதழேந்திய மலிந்துவீழரிப்பனி
செவ்விரல்கடைக்கண் சேர்த்திச்சிலதெறியாப்
புலம்பொடுவதியு நலங்கிளரரிவை"

இவ்வடிகளில் தலைவிவருந்திய தன்மையைச் சாற்றுதல்காண்க.

"களிறுகளம்படுத்த பெருஞ்செய்யாடவர்
ஒளிறுவாள்விழுப்புண் காணியபுறம்போந்து
... ...
பாண்டில்விளக்கிற் பரூஉச்சுடரழல
வேம்புதலையாத்த நோன்காழெஃகமொடு
... ...

நள்ளென்யாமத்துப் பள்ளிகொள்ளான்
பலரொடுமுரணிய பாசறைத்தொழிலே''

இவ்வடிகளும் பிறவும் பாசறையில் தலைவன் இருக்கும் தன்மையை விளக்கும்.

இந்நூலின் திரண்டகருத்து:—''அம்ம! மேகம் கார்காலத்து மழையைப்பெய்ய, உடம்பிற்கொண்ட குளிர்ச்சி வருத்தலினால் பலருங்கூடிக் கையிற்கொண்ட நெருப்புடையராய்ப் பற்பறைகொட்டி (பல்லோடு பல் பறையடித்தல்போல் சேர்ந்துசத்தித்து) நடுங்க, விலங்கு மேய்தற்றொழில் மறந்தொடுங்க, குரங்கு கால்கைகட்டிக் குளிர்மிக, புட்கள் காற்று மிகுதியால் மரத்தினின்று நிலத்தேவிழ, பசுக்கள் கடியவாய் உதைத்துக் கன்றை ஏற்றுக்கொள்ளலைத்தவிர, மலையைக் குளிர்விக்கு மாறுபோன்ற குளிர்காலத்தின்கண்; யாவரும் கமண்டலசல முண்ணாராய்ப்பகுத்தாற்போன்றவாயையுடைய இந்தளத்திலிட்ட நெருப்பின் வெம்மையை நுகர, கணவரைப்பிரிந்த மகளிர் வருந்தக் காலமழை பெய்திருந்தது. அவ்விடத்துக் காட்சிக்கினியவாகிய நல்ல மனையின்கண் மலர்பெய் மெல்லணைமிசையிருந்து 'விண்ணிடத்துத் திங்கட்செல்வனோடு திரியும் உரோகிணிபோல யாமும் தலைவன் பிரிவின்றி இருத்தலைப் பெற்றிலேமே' என்று நினைத்து நெட்டுயிர்த்துத் தன் கடைக்கண்ணினீர்வர அந்நீரிற் சிலவற்றைச் செவ்விரலைச் சேர்த்தித் தெறித்துத் தனிமையோடு கிடக்கும் அன்புமிகும் அரிவைக்கு (தலைவிக்கு)த் தீதா இருக்கின்ற ஆற்றற் கரியநினைவு தீரும்படி, வேந்தன் பாசறை இடத்திருந்து பொருகின்ற போர்த்தொழில் அவனுக்கு வெற்றியைக் கொடுத்து இப்பொழுதே முடிவதாக; இஃது என் விருப்பம்'' என்க.

(தொடரும்)

பத்திராசிரியர்.

எப்படியிருந்தால் இல்லறம் இனிது நடக்கும்?

(எக - ம் பக்கத் தொடர்ச்சி.)

கஉ. தம்பதிகளில் ஒருவரை ஒருவர் நெடுநேரம் பிரியவேண்டி இருந்தாலும், அல்லது ஒருநாழிகை யளவு விட்டுப்பிரியும்படி நேரிட்டாலும், அப்படிப் பிரிந்திருக்கும் நேரத்தில் சிந்திக்கும்படியான பிரிய வசனங்களைச் சொல்லியே பிரியவேண்டும்.

கங. ஒருவரை ஒருவர் காணும்போதெல்லாம் முகமலர்ச்சியுடன் அந்நியோந்நியமான இனிய வார்த்தைகளைச் சொல்ல ஒருபோதும் மறக்கலாகாது.

கச. கோபம் அல்லது மனஸ்தாபம் நேரிட்டாலும், அன்றைக்கன்று அதை ஒழித்துக்கொள்ள வேண்டும்.

கரு. தம்பதிகளில் யார் தவறிப்போனாலும், அதை உடனே ஒப்புக்கொண்டு மற்றவரை மன்னிக்கும்படி வேண்டிக்கொள்ளத் தாமதிக்கப்படாது.

கசு. கல்யாணமான புதிதில் அவர்கள் அனுபவித்த சந்தோஷங்களையும் நாட்களையும் மறக்கப்படாது.

கஎ. இன்னின்ன செய்திருந்தால் இன்னின்ன சௌக்கியத்தை அடையலாமே யென்று நடவாததை யோசித்து ஏங்காமல் இருக்கிறவரைக்கும் சௌக்கியமடைந்து மனம் அமைதியாயிருக்கவேண்டும்.

கஅ. இல்வாழ்க்கையானது ஈசுவரனுடைய நியமனம் என்பதையாவது அவருடைய சகாயம் இல்லாமல் இல்வாழ்க்கை பூரணமாய்ச் சுகப்படாது என்பதையாவது மறவாதிருக்கவேண்டும்.

கசு. தம்பதிகள் இருவரும் அறநெறியில் ஒழுகுகிறோம் என்று நிச்சயமாய்த் தெரிந்து கொள்ளுகிறவரையில் மேலும் மேலும் திருந்தப் பிரயத்தனப் படவேண்டும்.

உ0. மோக்ஷ மடையவேண்டு மென்னும் நோக்கம் எப்போதும் மறந்துவிடலாகாது.

இவ்வகைகளைக் கைக்கொண் டொழுகுவார்களானல் அத்தம்பதிகள் இருக்கும் வீடேவீடு என்னலாம். ஆகையால் ஒவ்வொருவரும் இம்முறைகளை அனுசரித்து இகபரசாதனமெய்தி இன்புற்று வாழக்கடவர்.

தர்மோபதேசி.

கம்பர் சரித்திரம்.

(ருகூ-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆனல் ஈண்டுக்கூறிய காலத்தைப்பற்றி ஐயுறவு கொள்ளும்படி செய்தற்குரிய செய்திகள் இரண்டிருக்கின்றன. அவற்றுள் ஒன்று:

“எண்ணியசகாத்தமெண்ணூற் றேழின்மேற்சடையன்வாழ்வு
நண்ணியவெண்ணெய்நல்லூர் தன்னிலேகம்பநாடன்
பண்ணியவிராமகாதை பங்குனியத்தநாளிற்
கண்ணியவரங்கர்முன்னே கவியரங்கேற்றினனே”

(பங்குனியுத்திரத்தில் என்று பாடங்கூறுவர் ஸ்ரீமத் வித்துவான், ரா—ராகவ ஐயங்கார்.)

எனவரும் கம்பராமாயணத் தனியனிலுள்ள 'எண்ணூற் றேழின் மேல்' என்பதற்குச் சாலிவாகன சகவருடம் எண்ணூற் றேழுக்குமேல் எனப் பொருள்கொண்டு கம்பநாடர் இராமாயணம்பாடித் திருவரங்கத்தில் அரங்கேற்றியகாலம் அதுவாம் எனக் கூறுவது. அது கி-பி வருடம் 885 ஆகின்றது. பராந்தகச்சோழன் பட்டமெய்திய காலம் கி-பி. 907 ஆதலின், அஃது அதற்கும் 22-வருடங்கள் முற்பட்டதாகின்றது. ஆகவே கம்பநாடரை ஆதரித்த சடையப்பவள்ளல், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராஜ ராஜன் ஆகிய இவர்கள் காலத்துக்கு மிகவு முற்பட்டதாகின்றமையிற் பொருந்தாது. இனி அத்தொடருக்கு,

"எண்ணிய (முன்னே ஆயிரம்வரையினும்) எண்ணப்பட்ட, சகாத்தம் சாலிவாகன சகாப்தவருடம், எண் - (இப்பொழுது) எண்ணப்படுகின்ற, நூற்றேழின்மேல்-நூற்றேழினுக்குமேல்"

என்று பொருள்கொண்டு இராமாயணம் திருவரங்கத்தில் சாலிவாகன சகவருடம் 1107 க்கு மேல் அரங்கேற்றப்பட்டதாமென்று கூறின் அது கி-பி வருடம் 1185 ஆதலாலும், மேற்கூறப்பட்ட சடையப்ப வள்ளல் முதலியவர்களின் காலத்தோடு மாறுபடாமையாலும், அது கம்பநாடர் முதுமைப்பருவத்தோ டிருந்தகாலமெனக் கொள்ளப்படுதலாலும் பொருந்தியதாகும்.

இனி, இரண்டாவது: ஸ்ரீமந்-நாதமுனிகள் கம்பராமாயணம் அரங்கேறிய சபையிற் சபைத்தலைவராக வீற்றிருந்தனர் என்பது.

ஸ்ரீமந் நாதமுனிகள் கலியுகவருடம் 3684-ல் அவதரித்துத் தமது 330-ம் வயதிற் பரமபதமடைந்தனர் என்று குருபரம்பரை கூறுகின்றது. அதன்படி அவர் பரமபதமடைந்த காலமே மேற்கூறப்பட்ட சடையப்ப வள்ளல் முதலியவர்களின் காலத்துக்கு 200-வருடங்களுக்குமேல் முற்பட்டதாகின்றது. ஸ்ரீமந் நாதமுனிகள் காலத்தை இன்னும் பிற்பட்டதாகக்கொண்டு பார்ப்போம் எனினும் அப்பெரியார், விக்கிரமன் ஆட்சியின் முடிவில் 120-வயதுடையவராகிய இராமாநுஜரது இளமைப் பருவத்திலே பரமபதமடைந்தவரும், யமுனைத்துறைவர் என்னு மறுபெயருடையவருமாகிய ஸ்ரீ ஆளவந்தாருக்குப் பாட்டனாராதலின், அவர்காலம், சடையப்பவள்ளல் முதலியவர்களின் காலத்துக்கு 150-வருடங்கள் முற்பட்டதாம் என்பதில் யாதுங்குறையுறாது; ஆதலின் கம்பநாடர் தமது

இராமாயணத்தை அரங்கேற்றிய சபையில் ஸ்ரீமந் நாதமுனிகள் சபைத் தலைவராக வீற்றிருந்தனர் என்பது பொருந்தாது. ஆனால் அக்காலத்திலே அப்பெரியாரைப்போலச் சிறந்து விளங்கிய வேறொரு வைணவப் பெரியாரே அச்சபைத்தலைவராய் வீற்றிருந்திருப்பர் என்பதில் ஐயுறவில்லை. ஆனால், அவர் இராமாநுஜருடைய சிஷ்யர்களில் ஒருவரும், மிகவுஞ் சிறந்தவருமாகிய ஸ்ரீ கூரத்தாழ்வான் புதல்வர்கள் இருவரில் ஒருவரான பட்டராய் இருக்கலாம் எனக்கருது கின்றேன்.

கம்பநாடருடைய தந்தையார்.

திருவள்ளுவ தேவருடைய தாய்தந்தையர் ஆதியும் பகவனுமாவர் எனக் கொண்டிருக்கின்றனர். கபிலர் அகவலும் அதனை வலியுறுத்துகின்றது. திருக்குறளின் முதற்செய்யுளிலுள்ள 'ஆதிபகவன்' என்னுந் தொடர் ஒருபொருளால் ஈடுமெடுப்புமில் இறைவனையும், ஒருபொருளால் திருவள்ளுவ தேவருடைய பெற்றோரையும் உணர்த்துவதாகும் என்கின்றனர்.

கம்பநாடர் தம்பெற்றோரைப்பற்றி இந்நூற்றாண்டிற்குமுன் னூற்றிலிருந்தோர் யாதொன்றுங் கூறியிருப்பதாகத் தெரியவில்லை. இப்பொழுது சிலர் எழுதியுள்ள சில ஆராய்ச்சிகளாலும், சில தனிச்செய்யுட்களாலும் அவருடைய தந்தையார் திருப்பெயர் இதுவென விளங்கியது. அன்றியும் இதுகாறுந் தன்பொருளைக் காட்டிக்கொண்டிருந்ததும், கம்பராமாயணத் தனியன்களில் முதற்செய்யுளாகிய 'தராதலத்தின்' என்னுஞ் செய்யுளிலுள்ளதுமாகிய 'ஆதித்தன்' என்னுஞ் சொல்லின் பொருளும் இனிது விளங்கியது. கம்பர் தந்தையார் பெயரே ஆதித்தன் என்பது.

(தொடரும்)

கா-ர-கோவிந்தராஜ முதலியார்,
பச்சையப்பன்காலேஜ் தமிழ்ப்பண்டிதர், சென்னை.

நாம் எதனை விரும்புவது?

(எஉ - ம் பக்கத் தொடர்ச்சி.)

நூற்களை நாம் எதுகாறும் ஆராய்தல் வேண்டுமெனின், நமது இயல்பும், நமக்கிடமாகிய தூல சூக்ஷ்மகாரணமென்னும் மூவகைப்பட்ட சரீரசஞ்சாரஏதுவாகிய தூலசூக்ஷ்ம காரணமென்னும் மூவகையாகிய உலகியல்பும், இவ்வுலகங்கட்கும் இவற்றினிடத்துப் பல்வகைப்பட்டுலவும் ஜீவர்கட்கும் தலைவனாகிய இறைவன தியல்பும் நம் புத்திக்கு ஐயந

திரிபு இன்றிய உணர்ச்சி உளதாகும் வரையில் நூல்களின் ஆராய்ச்சி வேண்டற்பாலதாம். அவ்வாறு கற்கவேண்டியவற்றைக் கற்று உணர வேண்டியவற்றை உணர்ந்தபின், தலைவனால் நமதியல்புக்குத் தக்கவாறு விதித்துள்ள நித்தியம் நைமித்தியம் காமியம் என்ற சுபகர்ம்மங்களைச் செய்து இறைவனால் விலக்கப்பட்ட கொலையாதிய தீத்தொழிலை முற்றும் விடுத்து, அருள்முதலிய உத்தமகுணங்களை மேற்கொண்டு இவ்வுலக இன்பத்தை நுகர்வதுடன் உண்மையாகிய நிறைந்த இன்பவடிவினனை இறைவனை அவ்வின்ப அடைவினிமித்தம் வழிபடல்வேண்டும். அங்ஙனம் வழிபடுவோர்க்குப் புறவிலக்கணம் கo, அங்கவிலக்கணம் கo, உளத்திலக்கணம் ௩. ஆக இலக்கணம், உ௩-ஆகும். அவையாவன:—

புறத்திலக்கணம்: — விபூதி உருத்திராக்கமணிதல், குரவனைவழிபடல், சிவனைப்புகழுதல், சிவநாமமுச்சரித்தல் சிவனருச்சனைசெய்தல், சிவதன்மம்புரிதல், சிவசரிதங்கேட்டல், சிவாலயத் தொண்டு செயல், ஒத்தபத்தரிடத்தன்றி வேறிடத் துணவொழிதல், சிவபத்சர்க்கீதல் எனப் பத்தாம்.

அங்கவிலக்கணம்: — சிவத்தியல் கூறிற் கண்டம் விம்முதல்; சிவனியல் புணருந்தொறும் நாத்துடித்தல்; இதழ்துடித்தல்; தேகங்குலுங்குதல்; புறமயிர் புளகித்தல்; வெயர்வுண்டாதல்; நாக்குழறுதல்; ஆனந்தக் கண்ணீர் சொரிதல்; வாய்விட்டழுதல்; பரவசனாய்த் தன்னைமறந்திருத்தல் என இவை பத்துமாம்.

உளத்திலக்கணம்: — ஐந்தெழுத்துன்னல், மானதபூசை, சிவனையுந் தன்னையும் ஒன்றெனக்காணல் என்னும் இவை மூன்றுமென்க.

இவ்வாறு இறைவனை வழிபட அதன்பலனாக நித்தியவஸ்து இவை; அநித்தியவஸ்து இவை என்கின்ற விவேகமுண்டாகும்; அதுபற்றிச் சர்வலோகங்களிலுந் தோன்றும் விஷய போகங்களிலும் உவர்ப்பு உண்டாம். இவ் விவேகம் வைராக்கியம் (உவர்ப்பு) இரண்டும் இக்கொடிய சம்சாரமென்னும் ஆரண்யத்தைக் கடக்க விரும்பியவனுக்கு அத்யந்த சாதனமாகும். பல் வேறுவகைப் பட்டமுட்கொடிகளால் நிறைந்த காட்டைக் கடப்போனுக்குக் காலிற் செருப்புங் கையிற் கோலும் இருப்பின் காட்டிலுளதாம் இடுக்கணகன்று இனிதிற் செல்வான். அதுபோல் கொடிய சம்சாரவனத்தைக் கடப்போனுக்கு வைராக்கியம் செருப்பாகவும், விவேகம் கைக்கோலாகவும் உதவியாமென்க.

(தொடரும்)

சோ. வேலாயுத முதலியார்.

ஸ்ரீமத் கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள்.

இப்பெரியார் சென்னை முதலிய இடங்களிற் பல சாதுசங்கங்களை நிறுவியும், ஞானசாத்திர பாடங்கள் நடத்தியும் நடத்துவித்தும், பல ஞானநூல்களை அச்சிட்டு வெளியாக்கியும், பல இடங்களில் சாதுசங்க விழாக் கொண்டாட்ட காலங்களில் நேரிற் சென்றிருந்து சிறப்புறுத்தியும், இன்னும் பல்லாற்றானும் வேதாந்தக் கொள்கைகளை உலோகோபகாரமாக விருத்திபண்ணிக்கொண்டிருந்து சென்ற பிங்கள ௵ பங்குனி ௴ உ௩ உ (5-4-18) விதேக கைவல்ய மடைந்தனர். இவர் பிரிவுக்கு நமது சங்கத்தினர் பெரிதும் வருந்துவதை வெளியிட்டுக் கொண்டனம்.

சந்திரகுப்த சரித்திரம்:—இது, புதுவையிலிருக்கும் ப்ரம்மஸ்ரீ வ-வெ-சுப்ரமண்ய ஐயரவர்களால் இனிய வசனநடையில் எழுதி வெளியிடப் பட்டுளது. இதிற் பண்டைக்காலத்தில் நமது இந்தியா இருந்த நிலைமை, சீர்திருத்தம், இராஜாங்க விஷயம் முதலியவற்றைக் குறிக்கப்பட்டிருக்கின்றன. இது யாவரும் படிக்கத்தக்கது; மாணவர்களுக்குப் பெரிதும் பயன்படும். இத்தகைய ஆராய்ச்சி முறையிலேயே நம்தேயத்துப் புராதன கதைகளில் இன்னும் பல வெளிவரல்வேண்டும்.

இப்புத்தகத்தின் விலை அணா-சு. தபாற்செலவு வேறு.

வ-வே-ஸு-ஐயர்,
"கம்பநிலயம்" புதுச்சேரி.

வேண்டுவோர் இவ்விலாசத்திற்கு எழுதிப் பெறலாம்.

குகப்பெருமாள்:— இது கம்பராமாயணத்துள்ள இராமருக்கு நண்புபூண்ட குகன் என்னும் வேடர்தலைவனது இனிய சரிதம். யாவரும் படித்து மகிழவேண்டுமென்று இனிய வசனநடையில் எழுதி வெளியிடப் பட்டுளது.

விலை அணா ௩. தபாற்செலவு வேறு.

கிடைக்கு மிடம்:—வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,
வேலூர் (தென்னிந்தியா.)

முக்கிய குறிப்பு.

[illegible]மிழ் நன்மக்கள் பலர்க்கு நமது "தமிழ்மகவு" அனுப்பப் பட[illegible]. அதன் சந்தாப்பணத்தைத் தாங்களே அனுப்பினர் தெள்ளறிவுடையோர் சிலர்; கேட்டபின் அனுப்பினர் சிலஅறிஞர்; பலமுறைகேட்டும் அனுப்பாத அறிஞர்பலர். இதுவரையில் அனுப்பாதிருப்பவர்கள் இதனைக் கண்ணுற்றவுடனே நேரே பத்திராசிரியர் இடமேனும், அவர் கையெழுத்திட்ட ரசீது கொண்டுவரும் ஆள்வசமேனும் சந்தாவை அனுப்பிவிடும்படி பெரிதும்வேண்டப் படுகிறார்கள். சிலர் இதன் முன்பத்திரிகை வரையில் பெற்றுக் கொண்டு இனி எமக்குப் பத்திரிகை வேண்டாமென்கின்றனர்; இவர் இவ்வாறு கூறற்குக்காரணம் நாம் சந்தாப்பணங் கேட்டனுப்பியதுதான்.

இங்ஙனம்:

சொ. வேலாயுதன்,

அக்கிராசனாதிபதி, புதுவைத் தமிழ்ச்சங்கம்.

அறிவிப்பு.

நமது "தமிழ் மகவு" ஒவ்வொரு தமிழ் மாதங்களிலும் ௨௦ வ க்குள் அதன் சந்தாதாரர்கள் வசம் சேரும். அவ்வாறு சேராவிடின் உடனே அங்கங்குள்ள போஸ்டு மானேஜருக்குத் தெரிவித்துக் கொள்ளவேண்டும். மாதந்தோறும் கவனமாய் எல்லா விலாசங்களையும் இருமுறை பார்வையிட்டே பத்திரிகைகள் அனுப்பப்படுகின்றன. பத்திரிகை மேற்படி தேதிக்குள் வந்து சேராவிடின் அது எமது குறையென் றெண்ணற்க. போஸ்டுகளிலும் விசாரித்துக் கிடைக்காவிடின், பத்திரிகை மானேஜருக்கு எழுதினால் பெறலாம்.

---

௧௦ - சந்தாதாரர்களைச் சேர்த்து முற்பண மனுப்பும்படி செய்பவர்கட்கு இனாமாகப் பத்திரிகை மாதந்தோறும் அனுப்பப்படும். மாதிரிப்பத்திரிகை வேண்டுவோர் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

☞ பல கடிதங்கள் எங்களிடம் நேரேவந்து சேராமல் தவறியன என்று தெரிகின்றன. யாவரும் இனி இவ்விலாசத்திற்கே எழுதுக. விலாசம்:— "புதுவைத் தமிழ்ச் சங்கம்" ஆபீஸ்

நெ. 48. ரங்கப்பிள்ளை வீதி

புதுவை.